## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைய - 2013

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்புடனான 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் சுற்றுலா நடவடிக்கைகள் அதிகாரச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) சீ பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்பத் தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயபூர்வமாக தயாரிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்கள் அற்ற நிதிசார் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறான தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டை தீர்மானித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000 - 1810) இசைவாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை அரச கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)**

கீழே காணப்படும் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| இலங்கை அரச கணக்கீட்டு நியமத்துடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நியமம் இலக்கம் 07 | சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்கள் என்பவற்றை மீள் மதிப்பீடு செய்வதாயின், குறித்த சொத்துத் தொகுதிக்குரிய சகல சொத்துக்கள் பொறித்தொகுதி, உபகரணங்கள் யாவும் மீள மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், அதிகார சபையின் சகல காணிகளையும் கட்டிடங்களையும் மீள மதிப்பீடு செய்யாது, தலைமை அலுவலகத்தின் காணிகளும் கட்டிடங்களும் மாத்திரம் 2008 ஆம் ஆண்டில் மீள மதிப்பீடு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்ட தொகையாக ரூபா 1,378 மில்லியன் நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. ஏனைய காணிகளும் கட்டிடங்களும் மீள மதிப்பீடு செய்யப்படாமையால் அதிகார சபையின் காணிகளதும் கட்டிடங்களதும் நியாயபூர்வமான பெறுமதி நிதிசார் கூற்றுக்களில் காட்டப்படவில்லை. |
| (ஆ) நியமம் இலக்கம் 07 | செயற்பாட்டு வாடகைக் கொள்வனவின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள சொத்துக்களை அவற்றின் தன்மைக்கேற்ப வாடகைக் கொள்வனவு வழங்குபவரின் நிலைமைக் கூற்றில் காட்ட வேண்டுமாயினும், செயற்பாட்டு வாடகைக் கொள்வனவின் அடிப்படையில் பெறப்பட்ட காணிகளதும் கட்டிடங்களதும் பெறுமதி அதிகார சபையினது நிலைமைக் கூற்றில் காட்டப்படவில்லை. |
| (இ) நியமம் இலக்கம் 08 | அதிகார சபைக்கு எதிராகவும் அதிகார சபையாலும் ஆரம்பிக்கபட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்ட சட்டபூர்வ விடயங்கள் நிதிசார் கூற்றுக்களில் வெளிக்கொணரப்படவில்லை.<br><br>(i) சர்வதேச இந்திய சினிமா விருது வழங்கல் விழாவின்போது உணவு, தங்குமிட வசதி, போக்குவரத்து வசதி என்பவற்றை வழங்கியமைக்காக 3 வெளி நிறுவனங்கள் ரூபா 32,980,555 இழப்பீட்டைக் கோரி |

அதிகார சபைக்கெதிராக நீதிமன்றங்களில் 3 வழக்குகளைத் தொடுத்திருந்தன.

(ii) சேவை நீகக்ம் செய்யப்பட்ட 2 ஊழியர்கள் மற்றும் தங்குமிட வசதி வழங்கும் வரியிறுப்பாளர் ஒருவர் என்போரால் நலன்களைக்கோரி நீதிமன்றங்களில் 3 வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன.

(iii) அரச சொத்துத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பாக 13 நபர்களுக்கெதிராக அதிகாரசபையால் மூன்று வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன.

**2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

அதிகார சபையின் நிதிசார் கூற்றுக்களதும் கீழே குறிப்பிடப்பட்ட நிறுவனங்களது நிதிசார் கூற்றுக்களதும் மீதிகளுக்கிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. இது தொடர்பாகக் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்படவில்லை.

| விபரம் | நிதிக்கூற்றின்படியான மீதி<br>ரூபா | உப நிதிசார் அறிக்கை விபரம்<br>ரூபா | உப நிதிசார் அறிக்கைப் பிரகாரமான மீதி<br>ரூபா | வேறுபாடு<br>ரூபா |
|---|---|---|---|---|
| இலங்கை மாநாட்டுப் பணியகத்திற்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை | 26,848 | இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் நிதிசார் நிலைமைக் கூற்று | 58,115,407 | 58,088,559 |
| இலங்கை ஹோட்டல் மற்றும் முகாமைத்துவ நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை | 6,511,960 | இலங்கை ஹோட்டல் மற்றும் முகாமைத்துவ நிறுவகத்தின் நிதிசார் நிலைமைக் கூற்று | 30,297,422 | 123,785,462 |
| இலங்கை ஹோட்டல் மற்றும் முகாமைத்துவ நிறுவகம் பெறவேண்டிய தொகை | 11,290,282 | இலங்கை ஹோட்டல் மற்றும் முகாமைத்துவ நிறுவனத்தின் நிதிசார் நிலமைக் கூற்று | 8,297,268 | 2,993,014 |

**2.2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை**

வர்த்தகக் கடன்பட்டோரிடமிருந்து பெற வேண்டிய ரூபா 2,050,954 நான்கு ஆண்டுகளுக்கு மேலாகவும் ரூபா 79,451 மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட 4 ஆண்டுகளுக்குக் குறைவாகவும் ரூபா 4,621,863 ஓராண்டிற்கு மேலாகவும் நிலுவை மீதிகளில் உள்ளடங்கியிருந்தன.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| (அ) | தேய்மான முதலீடு (சுற்றுலாச் சபை) | 52,154,737 | (i) சான்றிதழ் அல்லது வேறு எழுத்து மூல ஆவணம்<br>(ii) மீதியை உறுதிப்படுத்தும் கடிதம் |
| (ஆ) | தேய்மான முதலீடு (சுற்றுலா மேம்பாடு) | 976,509 | |
| (இ) | புதையல் நிதியம் | 759,021 | i. பங்குச் சான்றிதழ் அல்லது வேறு எழுத்து மூல ஆவணம்<br>ii. மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் |
| (ஈ) | இலங்கை வரையறுக்கப்பட்ட ஹோட்டல் சுற்றுலாக் கம்பனி | 750,000 | |
| (உ) | வழங்கல் (பெருமளவிலான கருங்கற்கள்) | 1.067,850 | i. வழங்குநரைத் தெரிவு செய்யும் ஆவணம்<br>ii. வழங்குநர் சமர்ப்பித்த இன்வொய்சு<br>iii.பொருட்களைக் கொண்டு செல்லப் பயன்படுத்திய வாகன விபரம்<br>iv. வழங்குதலைப் பெற்றுக்கொண்ட உள்ளவாறான அறிக்கையும் செய்த வேலைகளுக்கான அறிக்கையும் |
| (ஊ) | பெந்தோட்டை தேசிய விடுமுறைப் பணியக வளகாத்தின் வடக்கு எல்லையில் பெந்தோட்டை ஆற்றை அண்மித்த 15 ஏக்கர் காணி | - | சுற்றுலாச் சபையின் இணைந்த நிறுவனமான சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினது உரித்தல்லாது இருப்பதைக் குறிக்கும் எழுத்து மூல ஆவணம் |
| (எ) | வர்த்தக கடன்பட்டோர் | 20,641,412 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் |
| (ஏ) | சில்லறைக் கடன்பட்டோர் | 4,638,137 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் |
| (ஐ) | நீர் நுகர்வுக் கடன்பட்டோர் (பாசிக்குடா) | 8,293,318 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானம் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா நடவடிக்கைகள் அதிகாரச் சட்டம் | |
| (i) அத்தியாயம் 1 பிரிவு 12 (4) (iii) | தனியார் ஹோட்டல் ஒன்றிற்கு இலங்கை வங்கி வழங்கிய ரூபா 160 மில்லியன் கடனுக்குரிய வட்டியில் ரூபா 7,382,305 அதிகார சபையால் செலுத்தப்படுவதற்குக் குறித்த அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படவில்லை. |
| (ii) அத்தியாயம் 1 பிரிவு 7(3) | மேற்படி கடனுக்கான வட்டியை அதிகார சபை செலுத்துவதற்கு 2010 ஜுன் 6 ஆந் திகதியன்று பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்தை அமுலாக்குவதற்குத் தேவையான பணிப்பாளர் சபையினது 5 அங்கத்தவர்களது சமூகம் இருக்கவில்லை. |
| (ஆ) 1996 ஜனவரி 24 ஆந் திகதிய சனாதிபதி செயலாளரின் வழிகாட்டல் சுற்றறிக்கை | அரச காணிகளைக் குத்தகை வழங்கும் போது, குத்தகைக்கான உடன்படிக்கையுடன் குத்தகைப் பணம் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தஞ் செய்யப்படவும் வேண்டும். அதிகார சபை குத்தகைக்கு வழங்கியுள்ள காணிகள் தொடர்பாக இச் சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (இ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீ.ஈ.டீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) அத்தியாயம் 09 பிரிவு 9.3.1 (i) | ஆட்சேர்ப்பும் பதவி உயர்வும் பணிப்பாளர் சபையாலும் அமைச்சினாலும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஒருமைப்பாட்டுடன் அங்கீகரிக்கப்பட வேண்டுமாயினும், ‘‘வன்ஸ்டொப் யுனிட்’’ எனும் பிரிவுக்கு ஆட்சேர்ப்பதில் இவ்வாறு நடைபெறவில்லை. |
| (ii) அத்தியாயம் 9 பிரிவு 9.14.1 | மனிதவள முகாமைத்துவத்துக்கான சட்டங்களும் பிரமாணங்களும் தொடர்பான சகல விடயங்களும் அடங்கிய மனிதவள முகாமைத்துவம் தொடர்பான அத்தியாயத்துடன் கூடிய நடைமுறைக் கோவை திறைசேரிச் செயலாளரது இணக்கத்துடன் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டுமாயினும், அதிகார சபையானது அத் தேவைகளுக்கு அனுசரணையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான அதிகார சபையின் நடவடிக்கைகளால் விளைந்த மிகை ரூபா 268,934,194 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 190,161,685 ஆகும். இதனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 78,772,509 அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. சுற்றுலா அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதித் தீர்வை மற்றும் பிற வருமானம் என்பன ரூபா 93,112,758 அதிகரித்தமையே இதற்கான முக்கிய காரணியாகும்.

### 3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டின்போது அதிகார சபையின் வருமானம் ரூபா 496 மில்லியன் ஆகும். அதன் முன்னைய ஆண்டின் ரூபா 408 மில்லியன் ஒப்பிடுகையில் அதிகரிப்பு ரூபா 21.5 சதவீதமாகக் காணப்பட்டது. அவ்வாறே, முன்னைய ஆண்டின் சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குச் செலவாகிய தொகைரூபா 217 மில்லியன் ஆகும், அதனுடன் ஒப்பிடுகையில் மிளாய்வாண்டின்போது செலவாகிய தொகை ரூபா 227 மில்லியன் ஆகும். இதற்கமைய, 4.6 சதவீதம் அதிகரிப்பு தென்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்திறன்

கீழே குறிப்பிடப்பட்டன அவதானிக்கப்பட்டன.

(அ) விடுதிகளின் செயற்திறன்

அதிகார சபைக்குரியதும் அதன் முகாமைத்துவத்தின் கீழ் வருவதுமான சுற்றுலா விடுமுறை விடுதிகள் நான்கினதும் சுற்றுலா விடுதிகள் மூன்றினதும் 2012 ஆம் ஆண்டிற்கான நிகர மிகை ரூபா 13,605,316 ஆகும். இதனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிகர மிகை ரூபா 4.642,129 ஆகும். மேந்தலைச் செலவினம் அதிகரித்ததால் 3 விடுமுறை விடுதிகளில் ரூபா 15,667,048 பற்றாக்குறை ஏற்பட்டு அதன்காரமாக மிகையில் குறையேற்படுவதற்கு அது பிரதான காரணியாக அமைந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போதிலோ, இது வரையுமோ அதிகார சபையின் நிறைவேற முடியாது போன இலக்குகளும் நோக்கங்களும்

2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா நடவடிக்கைகள் அதிகாரச் சட்டத்தின் 1 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்ட இலக்குகளும் நோக்கங்களும் எய்தப்பறெவில்லை.

(i) நெடுந்தவணை இலக்குகளும் 4 ஆண்டுத் திட்டமும் தயாரிக்கப்படுவது மற்றும் இலக்குகளை உள்ளடக்கும் நோக்குடன் சீரமைப்புச் செய்தலும் அதன் பொருட்டு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுதலும்

(ii) அதிகாரச் சட்டத்தில் குறிப்பாக உணர்த்தப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக விதிகளைத் தயாரித்தல், இதன் மூலம் சுற்றுலாத் துறையையும் அதனோடிணைந்த பிற தொழில்களையும் உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியாக ஏற்றக்கொள்ளப்பட்ட நியமங்களை முன்னேற்றுதல், அமுலாக்கல் மற்றம் பேணுதல் என்பவற்றிற்கான சுற்றுலா முயற்சியாளர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதலும் அதிகாரமளித்தலும்

(iii) அதிகாரச் சட்டத்தின் நோக்கங்களை உயர்வடையைச் செய்யும் நோக்கில் வசதிகளை வழங்குதலுக்கான சாதாரண அல்லது பிற சபைகளை அமைத்தல்

(iv) இலங்கையில் உள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு தாம் விரும்பிய இடங்களுக்குச் சுற்றுலா செல்வதற்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கான பணிகளில் ஈடுபடல்

(v) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா நடவடிக்கைகள் அதிகாரச் சட்டத்தின் IX அத்தியாயத்தின் பிரகாரம் சுற்றுலா முயற்சிகளையும் சுற்றுலாச் சேவைகளையும் பதிவு செய்தல் மற்றும் சுற்றுலாச் சேவைகள் சம்பந்தமான விலை, கட்டணங்கள், வீத அடிப்படை என்பவற்றை முறைப்படுத்தலும்

**4.2 முகாமைத்துவ விணைத்திறமையின்மை**

**காணிகளதும் சொத்துக்களதும் முகாமைத்துவம்**

கீழே குறிப்பிடப்பட்டவை அவதானிக்கப்பட்டன.

(அ) திருகோணமலையில் குச்சவெளி எனுமிடத்தில் அதிகார சபை சுவீகரித்த ஏறக்குறைய 510 ஏக்கர் காணியில் மீளாய்வாண்டு முடிவிலும் 50 ஏக்கருக்கும் குறைவான காணியே அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சொத்துக்களது உரித்துறுதிகளை ஒப்படைத்தல். சேர்த்துக்கொள்ளுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் போன்ற விபரங்களைக்குறிப்பிடும் காணிகள் மற்றும் சொத்துக்களின் பொருட்டான பதிவேடு ஒன்று பேணப்படவில்லை.

(இ) ஐம்பத்தாறு வாடி வீடுகள் மற்றம் 6.495 ஏக்கர் விளை நிலத்தை உள்ளடக்கிய 166 காணித் துண்டுகளை நிறுவனம் சுவீகரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டபோதும், மீளாய்வாண்டு முடிவு வரை அவற்றின் ஒரு பகுதி மாத்திரமே சுவீகரிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பெந்தோட்டே தேசிய விடுமுறை விடுதிக் காணியில் உள்ள வராஹேன பிரதேசத்தில் சில இடங்களில் பெருமளவில் மணல் அகற்றப்பட்டிருந்ததுடன் விடுமுறை விடுதிக் காணியில் கழிவுகளை அகற்றுதல் மற்றும் அத்துமீறிய நிர்மாண வேலைகள் என்பன நடைபெற்றுமிருந்தன. இச் சுற்றுலாப் பிரதேசத்தில் இவ்வாறாக நடைபெறும் அத்துமீறிய நடவடிக்கைகளைத் தீர்ப்பதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

**4.3 குறைபாடுகளாகத் தோற்றுபவை**

**பின்வருவன அவதானிக்கப்பட்டன.**

(அ) கல்பிட்டிய, துறையடித் துறைமுகத்தை நிர்மாணித்தல் மற்றும் வன்னிமுந்தல் நீர் நிலைக்கு அன்மித்த வீதியை நிர்மாணிக்கும் ஒப்பந்தமானது,

(i) வர்த்தகச் சந்தைக் கூறு விலைக் கோரலின் கீழ், கருங்கற்களை வழங்குவதற்குத் தெரிவு செய்யப்பட்ட வழங்குநருக்குப் பதிலாக செயற்திட்டப் பணிப்பாளரது விருப்பிற்கேற்ப வேறொரு நபரிடமிருந்து 1648 கியூப் கருங்கற்கள் கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 824,000 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) கல்பிட்டிய வேலைத்தளத்திற்குக் கருங்கற்கள், கூழாங்கற்கள் மற்றும் ஏ.பீ.சி என்பவற்றை வழங்கியதாகக் குறிப்பிடப்பட்ட டிப்பர் இயந்திரத்தின் சுற்றோட்டம் 3 கியூப் ஆகும். எனினும், 4 கியூப் வீதம் பொருட்கள் வழங்கப்பட்டதாகக் கருதப்பட்டுக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதால் அதிகளவில் வழங்கப்பட்ட ரூபா 2,549,000 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) அதிகார சபையானது, நேரடியாகப் பொறுப்பேற்காத 1648 கியூப் கருங்கற்கள், 368 கியூப் ஏ.பீ.சி, 40 கியூப் கூழாங்கள் என்பவற்றிக்கு ரூபா 10,196,000 கொடுப்பனவு செய்திருந்தது.

(ஆ) பெந்தோட்டை விடுமுறை விடுதிப் பிரதேசத்தில் கழிவு முறைமையைப் பேணுவதற்கான தொழிளாருக்கான ஒப்பந்தம் அநேக ஆண்டுகளாக ஒரே நிறுவனத்திற்கு கொள்வனவு வழிகாட்டலுக்குப் புறம்பாக வழங்கப்பட்டவாறிருந்தது. இதன்பொருட்டு அதிகார சபை 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 4,458,023 மற்றும் ரூபா 5,126,726 என அந் நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்திருந்தது. அந் நிறுவனம் அதனை உப ஒப்பந்தக்காரரிடம் 2 ஆண்டுகளுக்கு ரூபா 2,976,000 உப ஒப்பந்தத்தில் வழங்கியதால் அதிகார சபைக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 6,608,749 ஆகும்.

(இ) கதிர்காமம் சுற்றுலா விடுமுறை விடுதியில் 14 முதல் 44 வரையான இலக்கங்களையுடைய அறைகள் பழுதுபார்க்கப்பட்டதற்காக ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட ரூபா 29,195,802 தொகையில் கூடுதலாக வழங்கப்பட்டிருந்த தொகை ரூபா 11,089,228 ஆகும்.

(ஈ) கல்பிட்டிய மொறஹட்டுவாராம துறைமுக நிர்மாண வேலைகளுக்க டோசர் இயந்திரத்தை வழங்கியதாக வழங்குநர் சமர்ப்பித்த 3 கடிதங்களின் அடிப்படையில் 941.7 மணித்தியாலங்களுக்கு 3,226,950 வழங்கப்பட்டிருந்தது. ஆயினும், இந்த டோசர் இயந்திரத்தினது நாளாந்த மானி வாசிப்பு குறிக்கப்பட்டு வேலைக்கான மணித்தியாலங்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர் ஒருவரால் சான்றுதிப்படுத்தப்படாது இக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் வேலைப்பரிசோதகரால் டிறக்டரது சேவை திருப்திகரமாப் பொறப்பட்டதாகக் குறித்த 3 கடிதங்களிலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

**4.4 பயன்படுத்தப்படாத, குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) பஸ் வண்டி ஒன்று ரூபா 5,934,000 க்குக் கொள்வனவு செய்யப்பட்டு பின்னர் ரூபா 2.667,929 க்கான பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது 2012 ஜுன் தொடக்கம் மீளாய்வாண்டு டிசெம்பர் 31 வரை பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) 1969 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறைக்கென இலங்கை சுற்றுலாச் சபைக்கும், பின்னர் சுற்றுலா அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்ட பெந்தோட்டை சுற்றுலா விடுமுறை விடுதிக்குரிய ஏறக்குறைய 94 ஏக்கர் காணியில் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 வரை ஏறக்குறைய 50 ஏக்கர் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய, 43 ஆண்டுகளுக்கு மேலாக 40 ஏக்கருக்கு மேற்பட்ட காணி பயனற்றிருந்தது.

**4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பிபில,ராகல, ஹொரவபொத்தானை, மஹியங்கனை. வீரகெட்டிய, பத்துலு ஓயா, ஆகிய பிரதேசங்களில் உள்ள 7 விடுமுறை விடுதிகளுக்கு 3 ஆண்டுகளுக்கு முன்னிருந்தே

பாதுகாப்புப் பணிகளுக்கென ஏறக்குறைய ரூபா 3.508,415 வழங்கப்பட்டிருந்தது. எனினும், இவ்விடுமுறை விடுதிகள் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்படவில்லை.

**4.6 இனங்காணப்பட்ட இழப்புக்கள்**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) பெந்தோட்டை தேசிய விடுமுறை விடுதிப் பணியில் பயிரிடப்பட்டுள்ள ஏறக்குறைய 600 தென்னங் கன்றுகளில் 2013 ஜுலை முதல் ஏறக்குறைய 6 மாதங்கள் தொடர்ச்சியாக தேங்காய், இளநீர் என்பன பறிக்கப்படாமையால் அதிகார சபைக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 100,000 க்கு மேற்பட்டதாகும்.

(ஆ) பெந்தோட்டை தேசிய விடுமுறை விடுதிக் காணியில் உள்ள ஏறக்குறைய 2880 சதுர அடிக் கட்டிடப் பகுதி 2006 முதல் மீளாய்வாண்டு முடிவுவரை எதுவித பொருளாதார பயன்பாடும் இல்லாதிருந்தது. இக் கட்டிடப் பகுதியின் 2006 ஆம் ஆண்டிற்கான மாதாந்தச் சம்பாத்தியம் ரூபா 20,000 ஆகும். அதற்கமைய, மதிப்பிடப்பட்ட மொத்த இழப்பு ரூபா 1,800,000 ஆகும்.

(இ) கல்பிட்டிய ஒருங்கிணைந்த சுற்றுலா அபிவிருத்திச் செயற்திட்டத்தை 30 அமெரிக்க மில்லியன் டொலருக்கு மேற்பட்ட வெளிநாட்டு நிதிச் செயற்திட்டமென வகைப்படுத்தி, சம்பளமும் படியுமாக ரூபா 3,780,253 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) அதிகார சபைக்குச் சொந்தமான கொழும்பில் உள்ள கலாசார நிலையக் கட்டிடம் (னுருஊவுஊா் ர்முளுீஜவுயுடு) நகர்ப்புற அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்படுகையில் புத்தகப் பெறுநருக்கு ரூபா 7,274,715 குறைவான பெறுமதி வழங்கப்பட்டிருந்தது.

(உ) அதிகார சபைக்குச் சொந்தமான தேசிய விடுமுறை விடுதிப் பிரதேசத்தில் உள்ள தனியார் வியாபார நிறுவனம் ஒன்றிற்கு அதிகார சபையால் நீர் வழங்கப்பட்டதுடன் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் நீர்மானி செயற்படாமையால் அதனைத் திருத்தி அமைத்து கட்டணத்தை அறவிடாது போனமையால் மதிப்பிடப்பட்ட இழப்பு ரூபா 8,415,400 ஆகும்.

**4.7 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) பாசிக்குடா சுற்றுலா விடுதியில் மழை நீர் வடிந்து செல்வதற்கான வடிகால் முறைமையை அமைத்தல்.

(i) நிர்மாணச் செயற்திட்டம் நடைபெறும் காணியில் பூகற்ப வேறுபாடுகளைக் கருத்திற்கொள்ளாது நிர்மாண வேலை நடைபெற்றதால் வடிகாலில் நீர் தேங்கியிருந்தது.

(ii) அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவுப் பணிப்பாளர் இச் செயற்திட்டத்தின் தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழுவின் தலைவராகச் செயலாற்றியதுடன் அவரால் இச் செயற்திட்டத்தின் ரூபா 31,394,813 க்கான கொடுப்பனவு சான்றுறுதிப்படுத்தப்பட்டுமிருந்தது. ஒப்பந்த அடிப்படையில் இச்சேவையை மேற்கொண்ட விடுதியின் உத்தியோகத்தர் குறித்த கொடுப்பனவு உறுதிச் சான்றுகளது அளவைகளைக் குறிப்பிடும் அறிக்கையையும் கொடுப்பனவு பட்டியலையும் பரீசீலித்து சான்றுறுதி செய்து கொடுப்பனவு உறுதிச் சான்று தயாரிக்கப்பட்டிருந்தபோதும், அது அவரது பொறுப்பில் உள்ள வேலை அல்ல என அவதானிக்கப்பட்டது.

(iii) நிர்மாண வேலையானது கணக்காய்வில் நேரடியாகப் பரீசீலிக்கப்பட்ட போது கணிப்பிடப்பட்ட உள்ளவாறான அளவைகளைக் குறிக்கும் அறிக்கைகளும் விலைப்பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவிள் தொகையும் ஒப்பிடப்பட்ட போது செய்யப்பட்ட போது ஒப்பந்தகாரருக்கு ரூபா 3.792,420 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது.

(ஆ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் ''வன் ஸ்டொப்'' முதலீடுகளை மேம்படுத்துவதற்கான வெப் இணைய தள நிர்மாணிப்பு ஒப்பந்தத்தில்

I. வெப் இணைய தள நிர்மாண வேலைக்கு முன்கூட்டிய திட்டமோ அல்லது மதிப்பீடோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
II. தெரிவு செய்யப்பட்ட சேவை நாடுநருடன் எழுத்து மூல உடன்படிக்கை செய்யப்படாது, குறித்த பணி மாத்திரம் எழுத்துமூலம் அறிவிக்கப்ட்டிருந்தது.
III. ஒப்பந்தம் சம்பந்தமாக தொழில் பிணை முறி பெறப்படவில்லை.
IV 2014 ஜனவரி 6 இல் உள்ளவாறு இவ்வொப்பந்தம் தொடர்பாக ரூபா 699,300 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.8 செயற்திட்டத் தாமதம்

மேலதிக 4.000 அறைகளுடன் விடுதியை நிர்மாணித்தல் மற்றும் அடிப்படை வசதிகளை அமைத்தல் என்பவற்றிக்கு ரூபா 5,521 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் மேற்கொள்ளப்பட்ட கல்பிட்டிய ஒருங்கிணைந்த சுற்றுலா செயற்திட்டம் சம்பந்தமாக பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) கல்பிட்டிய ஒருங்கிணைந்த சுற்றுலா அபிவிருத்திச் செயற்திட்டத்தை அமுல்படுத்தி 5 ஆண்டுகளில் நிறைவு செய்வதற்குத் தேவையான அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் திறைசேரியின் தேசிய பொருட் கொள்வனவுத் திணைக்களத்தின் அங்கீகாரம் என்பன 2008 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2013 டிசெம்பர் 31 வரை ஒரு அறையேனும் பூர்த்தியாக்கவில்லை.

(ஆ) செயற்திட்ட அமுலாக்கல் திட்டம் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவச் செலவினத்திற்கான ஆலோசனை மற்றும் மூலதன வேலை போன்றனவற்றை உள்ளடக்குமாறு விரிவான வரவு செலவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இச்செயற்திட்டத்தின் கீழ் 12 தீவுகளை முதலீட்டாளருக்கு வழுங்குவதற்கு அதிகார சபை அனுமதி வழங்கியபோதும், மீளாய்வாண்டு முடிவுவரை முதலீட்டாளருக்கு வழங்கப்பட்டது 3 தீவுகள் மாத்திரமே.

## 4.9 மனிதவள முகாமைத்துவம்

அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 31 ஆகும். இதன் கீழ் வகைப்படுத்தப்பட்ட 192 பதவிகள் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் உள்ளவாறான எண்ணிக்கைகள் முறையே 156 மற்றும் 154 என்பனவாகும்.

# 5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

## 5.1 கூட்டிணைந்த திட்டம்

2013 முதல் 2015 வரையான 3 ஆண்டுகளுக்குக் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. இத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சில விடயங்கள்இலக்கிடப்படாததுடன்

ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் எய்த வேண்டிய இலக்கு காலத்துக்கேற்ப மீளாய்வு செய்யப்பட்டு நாளது வரையாக்கப்படவுமில்லை.

## 5.2 செயல் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அச் செயல் திட்டத்தில் கால எல்லை குறிப்பிடப்படவில்லை. செயற்திட்ட நிறைவேற்ற முன்னேற்றம் காலத்திற்கேற்ப பரீசீலிக்கப்படுவதற்கான நடைமுறை அறிமுகஞ் செய்யப்படவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

உதவிப் பணிப்பாளர் பதவியில் உள்ள உத்தியோகத்தர் ஒருவரது தலைமையின் கீழ் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நடைபெறுவதுடன் அப் பிரிவில் போதியளவு பதவியணியினர் சேர்த்துக்கொள்ளப்படவுமில்லை.

## 5.4 கொள்வனவுத் திட்டம்

2006 ஜனவாரி 25 ஆந் திகதிய தேசிய கொள்வனவு முகவர் நிலையச் சுற்றறிக்கையின் 8 ஆம் இலக்கத்தினது 4.2.1 (பீ 7 க்கமைய) பிரதான பொருட் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின்போது 13 விடயங்களது வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளவாறான விபரங்களுக்கிடையே 22 முதல் 100 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் வரவு, செலவுத் திட்டமானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாமை புலனாகியது.

## 5.6 வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2011 ஆம் ஆண்டினது வருடாந்த அறிக்கை 2014 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முகாமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அதிகார சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
(ஆ) செயற்திட்ட முகாமைத்துவம்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) கணக்கீடு